**வரையறுக்கப்பட்ட லக்திவ இன்ஜினியரிங் (தனியார்) கம்பனி - 2015**

---

வரயறுக்கப்பட்ட லக்திவ இன்ஜினியரிங் (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவித்தல் எனது பொறுப்பாகும். அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படையானது பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதும் கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 55 ஆம் பந்திக்கமைய சொத்தொன்று பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகிய திகதி முதல் அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதும் கிரமமான முறையில் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும், ரூபா 7,125,829 பெறுமதியான கம்பனியின் சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்விடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 12,881,658 பெறுமதியான அசைவற்ற இருப்பு விடயங்களின் காரணமாக ஏற்படும் நட்டம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 2,365,893 ஆன போதிலும், கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டிற்கமைய அது ரூபா 17,960,598 ஆனமையால், பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 15,594,705 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுக்கமைய பதவியணிக்கு செலுத்த வேண்டிய நிலுவைச் சம்பளம் ரூபா 12,470,792 தொகை, செலுத்த வேண்டிய ஊழியர் நலன்புரி நிதியத்தின் பங்களிப்பான ரூபா 859,411 மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பான ரூபா 181,350 தொகை ஆகியவற்றுக்குரிய

பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு ஆகியவற்றுக்கான ரூபா 12,272,702 ஆன இருப்புக்குரிய பட்டோலைகள் மற்றும் உறுதிச்சீட்டு அறிக்கைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாத காரணத்தால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம் மறுப்பு

இந்த அறிக்கையின் அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பராயமொன்றினை தெரிவிக்கவில்லை.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் கண்காணிப்பு தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை, விடய எல்லை மற்றும் வரையறைகள் மேற்குறிப்பிடப்பட்டவாறு ஆகும்.

(ஆ) எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கமைய

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 1,781,775 தொகையான பெறவேண்டிய பண மீதி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்படுவதுடன், அறவிடுவதற்கு நிச்சயமற்ற மீதியொன்றாக இருந்தது. அந்தப் பணத்தை அறவிடுவதற்கோ நிதியினை ஏற்பாடு செய்யவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 880,589 தொகையான நீண்டகாலமாக செலுத்த வேண்டிய மீதிகள் அவதானிக்கப்பட்டதுடன், அந்த செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் - 131(01) ஆம் பிரிவு | கம்பனிகள் அதிகாரச்சட்டத்திற்கமைய கம்பனிகள் பதிவாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய வருடாந்த அறிக்கை (படிவம் இலக்கம் 15) |

| | |
|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கை | சுற்றறிக்கைக்கமைய நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான லக்திவ இன்ஜினியரிங் கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 408 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,048,921 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,049,329 ஆன அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் பேரூந்து பழுதுபார்த்தல் வருமானம் ரூபா 10,397,967 இனால் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2013 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் நிதி மிகையொன்று நிலவிய போதும் 2011, 2012 மற்றும் 2014 ஆகிய வருடங்களில் பற்றாக்குறையொன்று நிலவியது. எவ்வாறெனினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியத்தை மீள சீராக்கியதன் பின்னர் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 22,392,631 ஆக காணப்பட்ட கம்பனியின் பங்களிப்பானது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 235,136,697 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

வரையறுக்கப்பட்ட லக்திவ இன்ஜினியரிங் (தனியார்) கம்பனியை ஆரம்பிக்கும் போது கம்பனியால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிப்பொறுப்புக்களாக இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேரூந்துகளை குறைந்த செலவில், உயர் தரத்துடன் முழுமையாகவும் பகுதியளவிலும் பழுதுபார்த்தல் மற்றும் விபத்திற்குள்ளாகிய பேரூந்துகளை பழுதுபார்த்தல், பேரூந்துகளின் பெயர்ப்பலகையின் பழுதுபார்த்தல், பேரூந்தின் இருக்கைகளுக்கான மேலுறைகள் மற்றும் இருக்கைகளுக்கான குஷன்களை தயாரித்தல் மற்றும் போக்குவரத்து அமைச்சிற்குரிய ஏனைய நிறுவனங்களின் வாகனங்களை பழுதுபார்த்தல் போன்ற பணிகள் இனங்காணப்பட்டிருந்தன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேரூந்துகள் மாத்திரம் பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன், போக்குவரத்து அமைச்சிற்கு சொந்தமான ஏனைய நிதி நிறுவனங்களின் வாகனங்களும் பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய வருடத்தில் 04 காலாண்டுகளுக்காக 96 பேரூந்தகள் பழுதுபார்க்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 47 பேரூந்துகள் மாத்திரம் பழுதுபார்க்கப்பட்டிருந்தன. அதற்கமைய, ஆண்டினுள் பழுதுபார்த்தல்களுக்காக திட்டமிடப்பட்ட பேரூந்துகளின் எண்ணிக்கையில் 49 சதவீதம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ii) பேரூந்துகளின் பழுதுபார்த்தல் தொடர்பில் கடந்த 05 வருடங்களின் தகவல்களுக்கமைய 2010 ஆம் ஆண்டின் போது 78 பேரூந்துகள் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டளவில்

பழுதுபார்க்கப்பட்ட பேரூந்துகளின் எண்ணிக்கை 47 வரை கிரமமாக குறைவடைந்திருந்தது.

(iii) டிப்போக்களிலிருந்து லக்திவ இன்ஜினியரிங் நிறுவனத்திற்கு பேரூந்து கையளிக்கப்பட்ட பின்னர், பழுதுபார்த்தல்களுக்காக பொறியியல் பிரிவிற்கு அனுப்பும் போது 120 நாட்கள் முதல் 508 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. பழுதுபார்த்தலினை ஆரம்பிப்பதற்கு முன்னர் இவ்வாறான நீண்டகாலம் வைத்திருந்தமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய அங்கீகாரம் மற்றும் நிதிஏற்பாடு இல்லாது கடமையாற்றிய மற்றும் ஒய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு சம்பள படிமுறையொன்று மேற்கொண்டு முறையே ரூபா 10,512,055 மற்றும் ரூபா 1,958,737 தொகையான செலுத்த வேண்டிய சம்பளங்கள் மற்றும் படிகளாக கணக்குகளில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த செலுத்த வேண்டிய தொகைக்காக 2009 மற்றும் 2010 ஆகிய வருடங்களில் முறையே ரூபா 1,693,000 மற்றும் ரூபா 254,000 தொகையான சம்பள முற்பணங்கள் செலுத்தப்பட்டு 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த முற்பணக்கணக்கை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்த சம்பள படிநிலை மாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு செலுத்த வேண்டிய சம்பளங்களுக்காக ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்பாக முறையே ரூபா 859,411 மற்றும் ரூபா 181,350 தொகை நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டினுள் ஊழியர் ஊக்குவிப்பு படிகளாக ரூபா 964,549 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஊக்குவிப்பு படிகளை செலுத்துதல் தொடர்பில் முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது லக்திவ இன்ஜினியரிங் தனியார் கம்பனியின் பேருந்து பழுதுபார்த்தல் பணிகளுக்காக அந்த நிறுவனத்தின் பதவியணிக்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையில் வெளிவாரி ஊழியர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஒரு குழுவில் இருவர் வீதம் 03 ஒப்பந்த குழுக்களை சேவையில் ஈடுபடுத்தி, அதற்காக ரூபா 2,707,230 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஊழிய ஒப்பந்த குழுக்களை தெரிவு செய்யும் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய விலைக்கேள்வி கோரப்படாமல் மற்றும் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டிராததுடன், எழுத்து மூல உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(உ) வரையறுக்கப்பட்ட லக்திவ இன்ஜினியரிங் (தனியார்) கம்பனியால் தமது பணிகள் ஏக்கலயில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குரிய சுமார் 23 ஏக்கர்கள் பரப்பளவான இடத்தின் ஒரு பகுதியில் நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், அந்த காணித் துண்டுகளின் சட்டரீதியான உரித்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பெறுகை நடைமுறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 8,084,081 செலவிடப்பட்டிருந்ததுடன், அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாது பெறுகை உத்தியோகத்தர் தனிப்பட்ட ரீதியில் 03 நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கூறுவிலைகளை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்கான உதிரிப்பாகங்களின் விநியோகத்திற்காக உத்தியோகத்தர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பெயர்ப்பலகை பழுதுபார்த்தலுக்கு தேவையான உதிரிப்பாகங்களை மொத்த விற்பனைக்கு கொள்வனவு செய்வதற்கான இயலுமை காணப்படும் போது, உதிரிப்பாகங்கள் தேவைப்படும் போது அலகு அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டமையால் மொத்த அடிப்படையில் கொள்வனவு செய்வதால் கிடைக்க கூடியதாக இருந்த பொருளாதார நலன்கள் (கழிவுகள்) இழக்கப்பட்டிருந்தது.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

வரையறுக்கப்பட்ட லக்திவ இன்ஜினியரிங் (தனியார்) கம்பனியின் 30 பதவிகளுக்காக 121 எண்ணிக்கையான பதவியணியை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்திருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கம்பனியின் பதவியணி 65 பேராக இருந்தமையால், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 56 பேருக்கான வெற்றிடங்கள் நிலவியது. அந்த வெற்றிடங்களுக்கிடையே கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பிரதான பதவிகளான பொது முகாமையாளர், நிர்வாக உத்தியோகத்தர், கணக்கு உத்தியோகத்தர், தொழிற்சாலை பொறியியலாளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் போன்ற பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. கம்பனியின் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கணக்கு உத்தியோகத்தர் பதவிகளுக்காக பணி மேவுகை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கமைய நிறுவனத்தின் பிரதான பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமிக்காமை நிறுவனத்தின் பணிகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு தடையாக அமைந்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கம்பனியின் உருவாக்கம் மற்றும் கம்பனியின் உரித்து

வரையறுக்கப்பட்ட லக்திவ இன்ஜினியரிங் (தனியார்) கம்பனி 2001 ஒக்தோபர் 01 ஆந் திகதி அரசிற்கு சொந்தமான கம்பனியொன்றாக நிறுவப்பட்டிருந்ததுடன், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2011 ஆகஸ்ட் 15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்தது. கம்பனியின் மூலதனமானது ரூபா 10/- ஆன 650,000 சாதாரணப் பங்குகளை கொண்டிருந்ததுடன், அவற்றுள் 2 பங்குகள் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தன. அந்த இரு பங்குகளும் பொது திறைசேரியின் செயலாளர் மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளரால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 5.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்திக்கமைய மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கைகள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 01 வருடம் 05 மாதங்கள் தாமதத்துடன், அதாவது 2017 யூலை 27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவிற்கமைய வரையறுக்கப்பட்ட லக்திவ இன்ஜினியரிங் (தனியார்) கம்பனியின் தூரநோக்கு மற்றும் செயற்பணியை நிறைவேற்றுவதற்காக 3 வருடங்களுக்கு குறைவான காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

வரையறுக்கப்பட்ட லக்திவ இன்ஜினியரிங் (தனியார்) கம்பனியின் பணிகளை பரிசோதிப்பதற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பெறுகைகள் திட்டம்

2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) பந்திக்கமைய கம்பனியால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வவ்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிராமை. |
| | (ii) | நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியில் நிறுவப்படாமை. |
| (ஆ) இருப்புக் கட்டுப்பாடு | (i) | இருப்பு பரிசோதனைகள் மேற்கொண்டிராமை |
| | (ii) | பாவனைக்கு எடுக்க முடியாத சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை |
| (இ) பெறுகை நடவடிக்கைகள் | | பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்காமை மற்றும் பெறுகை நடைமுறையினை பின்பற்றாது கொள்வனவுகளை மேற்கொள்ளல் |
| (ஈ) பதவியணியினர் நிர்வாகம் | | வெற்றிடங்களுக்காக ஊழியர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்காமை |